**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.320/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அறிவழகன் | த–பெ | ராஜ் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 45/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மூத்த உதவி மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.01.2026**

**1 ம் எதிரி ஆஜர். 3 ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து மூத்த உதவி மருத்துவராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 22.02.2015 அன்று முழு நேர பணியில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் இருந்த போது இரவு 7.45 மணிக்கு 36 வயதுடைய மீனாட்சி சுந்தரம் என்னும் நபர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை 4 அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கியதாக கூறினார். இந்த சம்பவம் மாலை 4.00 மணிக்கு NNL பேருந்தில் நடந்ததாக கூறினார். அவரை உள் நோயாளியாக அனுமதித்து பரிசோத்தித்த போது அவரது வலது முன் கையில் வீக்க காயம் இருந்தது, அவரது நெற்றியில் ஒரு வீக்க காயம் இருந்தது. அவருக்கு ஏற்ப்பட்ட காயத்தின் தன்னை சிறு காயம் வகையை சார்ந்தது என்று சான்று அளித்தேன். மேற்படி சான்று சம்பவ சமயத்தில் விபத்து பதிவேடு ஆவணம் கையிருப்பு இல்லாத காரணத்தால் வெள்ளை காகிதத்தில் மேற்படி காயங்களை பதிவு செய்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய **காய சான்று அ.சா.ஆ.3**. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

காயம்பட்டு சிகிச்சைக்கு வந்த நபர் தானாக இருசக்கர வாகனத்தில் செல்லும் போதோ, நடந்து செல்லும் போதோ கீழே விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். போலீசார் விசாரணையில் எங்களுடைய மருத்துவமனையில் விபத்து பதிவேடு இல்லாத காரணத்தால் வெள்ளை காகிதத்தில் எழுதினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.29 10:04:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.